**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (கட்டம் -1) - 2022**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (கட்டம் -1) 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை மின்சார சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 20 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 47037 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் வசதியளிப்பு நிர்வாக கைநூலின் பிரகாரம், மின்சக்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளடுதடன் இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. துாய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். நிகழ்ச்சித்திட்டதின் நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்பட்ட நீர் மின்வலு உருவாக்கம், உபமின்நிலையத்திற்கு இணைக்கப்பட்டவை, உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு, முனனேற்றப்பட்ட வினைத்திறனான நடுத்தர வோல்டேச் வலையமைப்பு முன்னேற்றப்பட்ட வினைத்திறனான மின்வலுவுக்கான பக்க முகாமைத்துவ கேள்வி மற்றும் வழங்கப்பட்ட இயலளவு அபிவிருத்தி ஆதரவு போன்ந ஐந்து கூறுகளின கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுலாக்கப்படுகின்றன. வசதியளிப்பு நிர்வாக கைநூலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,515.03 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 220 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 23,330.48 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்தியால் (AFD) நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 5,184.55 மில்லியன் தொகை இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பாரர்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2015 பெப்ரவரி 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 யூலை 13 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்தி முகவரின் கடன் மீதி இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இற்கமைய அறிக்கையிடல் திகதியில் இ.ரூபா பெறுமதிக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை இதன் விளைவால் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்ட கடன் மீதி மற்றும் அபிவிருத்தி செலவினம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கிளைக் கணக்குகளின் தொகுதியாக மேலதிக பொது முகாமையாளரின் (செயற்திட்டங்கள்) கீழ் செயற்திட்ட கணக்குகளை வடிவமைப்பது இலங்கை மின்சார சபையின் நடைமுறையாக உள்ளது. இது வழமைபோல் கணக்காய்வாளர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் எவ்வித வினாவும் எழுந்திருக்கவில்லை. மேலதிக பொது முகாமையாளரின் (செயற்திட்டங்கள்) கீழ் சகல செயற்திட்டங்களும் நிறை வேற்றப்பட்டிருந்தது அதேநேரம் கடன் கைதவிர்ப்பை மற்றும் இலங்கை மின்சாரசபை கொள்கை மற்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவங்கள் என்பவற்றின் வழியில் சம்பந்தப்பட்ட சொத்து நிர்மாணம் பதியப்படுகின்றன. சகல கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வரலாற்று கிரய எண்ணக்கருவின் கீழ் பொதுப் பேரேட்டில் பதியப்பட்டன. சம்பந்தப்பட்ட கடன்கள் விதிக்கப்பட்டவாறு நிதி அமைச்சின் வழிகாட்டலின் வழியில் இலங்கை மின்சார சபை நிதி முகாமையாளரால் பேணப்பட்டு நிர்வகிக்கப்பட்டு மற்றும் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. எனவே, கடன்கள் இலங்கை மின்சார சபை தலைமை அலுவலகத்தின் பொதுப் பேரேட்டின் கீழ் பதியப்படுகின்றன. | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைய நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட அமுலாக்கல் காலப் பகுதியின் போது அரசாங்கத்தால் இறுக்கப்பட்ட ரூபா 285.6 மில்லியன் மற்றும் ரூபா 46.6 மில்லியன் தொகையான முறையே வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் கட்டம் -1 ADB கடன் இல. 3147-ஸ்ஆர்ஜ ஆல் நிதியளிக்கப்பட்டுள்ளது. இந்த குறித்த கடன் உடன்படிக்கை இலங்கை அரசாங்கத்திற்கும் ADB இற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. ஆகவே, இந்த கடன் தாடர்பான கடப்பட்டுக் கட்டணம் மற்றும் வட்டி | சம்பந்தமான தகவல்களின் முறையான கணக்கீட்டு வெளிப்பாடு அல்லது வெளிப்படுத்தல்கள் வேண்டப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | | என்பன நிதி அமைச்சால் செலுத்தப்பட்டிருந்ததுடன் நிதி அமைச்சுடன் முறையான உடன்படிக்கை எதுவும் இல்லாமல் செயற்திட்டத்தின் கிரயமாக கணக்கீடு செய்ய முடியாது. CEB இன் கீழ் இதற்காக நாங்கள் கணக்கீடு செய்ய வேண்டுமாயின் தேசிய கணக்குகய் இரட்டை பதிவாக இருக்கும். | |
| (இ) | மீளாய்வாண்டின் போது கடன் உடன்படிக்கை இல. 3146 இன் கீழ் பெறப்பட்ட ரூபா 11.9 மில்லியன் மொத்தமான மூன்று கடன் கைதவிர்ப்புகள் பூநகரி காற்றலை சூரிய மின்சக்தி பூங்கா செயற்திட்டத்திற்கான சுற்றுச் சூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீட்டிற்காக இலங்கை நிலைபேறான மின்வலு அதிகாரசபையால் பயன்படுத்தப் பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த கடன் கைதவிர்ப்புகள் மற்றும் சம்பந்தப்பட்ட செலவினங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை நிலைபேறான மின்வலு அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட பூநகரி காற்றலை சூரிய மின்சக்தி பூங்கா செயற்திட்டத்திற்கான சுற்றுக் சூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீடு தனித்தனியாக பதிவாக உள்ளமையால் CEB உடன் ஒன்றுதிரட்ட முடியாதிருந்தது. எனவே, CEB இனுடைய கொடுக்கல் வாங்கல்கள் மாத்திரம் கடனிற்கு எதிராக பதியப்பட்டன. | கடன் தொடர்பான மொத்த கைதவிர்ப்புகளும் கணக்கீடு செய்யப்பட வேண்டும. |
| (ஈ) | CEB இன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நடைபெறும் வேலைகள் ரூபா 8,205.8 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் இது ரூபா 8,184.5 மில்லியனாக இருந்தது. இதன்படி நிதிக் கூற்றுக்களில் ரூபா 21.3 மில்லியன் இணக்கம் செய்யப்படாத மீதிகள் அவதானிக்கப்பட்டது. | வரையறுத்த நிப்போன் கம்பனிக்கான ரூபா 21.3 மில்லியன் தொகையான கொடுப்பனவு முற்பண நிதிய கணக்கின் ஊடாக செய்யப்பட்டிருந்தது. இதன்படி இந்த கொடுப்பனவு முற்பண நிதிய கணக்காக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அசட்டையீனம் காரணமாக 2022.12.31 இல் உள்ளவாறான CEB நிதிக் கூற்றுக்களில் உள்ளபடியான கொடுப்பனவுகள் மாற்றமடைந் திருக்கவில்லை. ஆதலால், சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட நிதிக்கூற்றுக்கள் முறையாக திருத்தப்பட்டிருந்தது. மேலும் இது 2023 சனவரியில் CEB நிதிக்கூற்றுக்களில் திருத்தப் பட்டிருந்தது. எனவே இது செயற்திட்ட நிதிக்கூற்றுக்களுடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களிலுள்ள வித்தியாசங்களை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | நடவடிக்கை | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம் / கணக்காய்வு அவதானிப்பு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் | அடையப்பட்ட செயலாற்றல் | | |
| | | சதவீதம் | சதவீதம் | | |
| பகுதி 01- நீர்மின்சார உருவாக்கல் அபிவிருத்தி மற்றும் உப நிலையத்திற்கு தொடர்புபட்டது. | (அ) மொறக்கொல்ல நீர் மின் பொறியில் நிர்மாணம்<br>i. Lot A1<br>ii. Lot A2<br>iii. Lot B<br>iv. Lot 3<br>v. Lot C | <br><br>80.20<br>50.00<br>40.00<br>83.48<br>100 | <br><br>75.70<br>38.90<br>27.10<br>83.48<br>100 | ஆரம்ப பட்டியல் பூர்த்தியாக்கல் திகதி 2019 யூன் மாதமாக இருந்தது. இது 2023 நவம்பர் அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பிரதான சிவில் வேலைகளிற்கான ஒப்பந்தம் (Lot A2) ஆரம்ப பட்டியல் பூர்த்தியாக்கல் திகதியின் பின்னரும் 2019 ஒக்தோபர் 04 இல் வழங்கப்பட்டது.<br>Lot A1 மற்றும் Lot A2 மீதான ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் (Lot 3) 2016 ஒக்தோபர் 24 இல் வழங்கப்பட்ட போதிலும் Lot A1 மற்றும் Lot A2 இற்கான ஒப்பந்தம் முறையே 2018 மே மாதம் மற்றும் 2019 ஒக்தோபர் மாதத்தில் வழங்கப்பட்டது. | செயற்திட்டமானது ஆலோசனை சேவைகள் தாமதப்பட்டமை மற்றும் தாமதமான கொள்வனவு நடைமுறை தாமதப்பட்டமையாக இருந்தது. |

**முகாமைத்துவத்தின் பதில்** முகாமைத்துவ கருத்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை.

**கணக்காய்வாளின் பரிந்துரைகள்** எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 3.2. ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 06 பகுதிகளைக் கொண்டுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒவ்வொரு பகுதிகளினதும் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு CEB ஆல் கையாளப்படுகின்ற சகல நிதியளிக்கப்பட்ட செயற் திட்டங்களினதும் மேற்பாரவைக்காக பொறுப்பாக இருந்த மேலதிக பொது முகாமையாளருக்கு பதிலாக பல்வேறு பிரதேச தலைவர்களின் கண்காணிப்பின் கீழ் இருந்தது. | அந்த நடவடிக்கைகள் ஒவ்வொரு பிரிவுகளினாலும் நிறைவேற்றுவதற்கு இயலாமையால் CEB இன் பல்வேறு பிரிவுகளிற்கும் ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே, CEB இன் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு உயர்ந்த திருப்திகரமான மட்டத்தில் இருந்தது. | திட்டமிட்டவாறு இருக்கின்ற செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்கும் நோக்கில் முறையான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்த வேண்டும். |